# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க,
# மேய்ச்சல் நிலங்கள்
# (ஒதுக்கிவைத்தல், அபிவிருத்திச்) சட்டம்

---

*[1983, சனவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

**1983,** சனவரி மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 50

1983 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மேய்ச்சல் நிலங்கள் (ஒதுக்கிவைத்தல், அபிவிருத்திச்) சட்டம்

[1983, சனவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ. 29/76
1022

**குறித்த சில அரச காணிகளை மேய்ச்சல் நிலமாக ஒதுக்கி வைப்பதற்கும், அத்தகைய காணிகளைக் குத்தகைக்கு விடுவதற்கும், அவற்றை அதிகாரமின்றி உடைமையில் வைத்திருக்கும், அல்லது அவற்றில் இருப்பாட்சி கொண்டிருக்கும் ஆட்களிடமிருந்து அத்தகைய காணிகளின் உடைமையை மீளப்பெற்றுக் கொள்வதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1983 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மேய்ச்சல் நிலங்கள் (ஒதுக்கிவைத்தல், அபிவிருத்திச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. அமைச்சரானவர், காணிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன், காலத்துக்குக் காலம் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையினால், ஏதேனும் அரச காணியை மேய்ச்சல் நிலமாக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள காணி என (இது இதனகத்துப்பின்னர் "மேய்ச்சல் நிலம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வெளிப்படுத்தலாம். *அரச காணிகளை மேய்ச்சல் நிலமாக வெளிப்படுத்தல்.*

3. காணி ஆணையாளர் அல்லது இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படுபவரான விலங்கு உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளருடனான கலந்தாலோசனையுடன் அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்படும் அலுவலரொருவர் இதனகத்துப்பின்னர் "குத்தகைகொள்வோன்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் பண்ணை விலங்கு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி, கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி, ஏதேனும் அரச நிறுவனத்துக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு அத்தகைய நிறுவனம் அல்லது ஆட்கள் குழு அத்தகைய மேய்ச்சல் நிலத்தை முகாமைசெய்து, அபிவிருத்தி செய்வதற்கான தகுதியைக் கொண்டுள்ளது என அவர் திருப்திப்படுமிடத்து, மேய்ச்சல் நிலம் எதனையும் குத்தகைக்கு விடுதல் வேண்டும். *காணி ஆணையாளருக்கு உரித்தாக்கப்பட்ட மேய்ச்சல் நிலங்களைக் குத்தகைக்கு விடுதல்.*

4. (1) காணி ஆணையாளர் அல்லது பணிப்பாளருடனான கலந்தாலோசனையுடன் அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர்,— *எந்தக் குத்தகை உடன்படிக்கையையும் முடிவுறுத்துவதற்கு காணி ஆணையாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு உள்ள தத்துவம்.*

(அ) அத்தகைய குத்தகை உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நியதிகளும் நிபந்தனைகளும் இணங்கியொழுகப்பட்டிருக்கவில்லையென ; அல்லது

(ஆ) எந்த மேய்ச்சல் நிலம் அத்தகைய குத்தகை உடன்படிக்கைக்கு அமைந்ததாகவுள்ளதோ அந்த மேய்ச்சல் நிலம் ஆகக்கூடிய அளவில் பயன்படுத்தப்படவில்லையென,

திருத்திப்படுமிடத்து, அவர், 3 ஆம் பிரிவின்கீழ் எவரேனும் குத்தகை

கொள்வோனுடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் குத்தகை உடன்படிக்கையை கட்டளைமூலம் முடிவுறுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளை எதுவும், அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய கட்டளை ஏன் இடப்படக்கூடாதெனக் காரணங்காட்டுமாறு குத்தகைகொள்வோனொருவருக்கு அறிவித்தல் விடுத்தபின்னரன்றியும், அத்தகைய காலப்பகுதிக்குள் அவர் காரணம் காட்டத் தவறுவதன்மீதன்றியும், அல்லது போதிய காரணம் காட்டாது விடுவதன்மீதன்றியும், குத்தகைகொள்வோன் ஒருவருக்கு எதிராக இடப்படுதலாகாது.

1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சி மீளப் பெறுதல்) சட்டம் ஏற்புடையதாதல்.

5. எல்லா மேய்ச்சல் நிலங்களும், 1981 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட, அரச காணிகளாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன், அத்தகைய காணி எதனையும் அதிகாரமின்றி உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது அதன்மீது இருப்பாட்சிகொண்டுள்ள எவரேனும் ஆளை வெளியகற்றுவதற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

பதிவேடுகளைப் பேணிவருதல்.

6. இச்சட்டத்தின்கீழான குத்தகைகொள்வோன் ஒவ்வொருவரும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பதிவேடுகளைப் பேணிவருதல் வேண்டும் என்பதுடன், காணி ஆணையாளருக்கும் அல்லது அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவருக்கும் அத்துடன், பணிப்பாளருக்கும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அறிக்கைகளைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

உட்பிரவேசிப்பதற்கும் பார்வையிடுவதற்கும் உள்ள தத்துவம்.

7. காணி ஆணையாளர் அல்லது அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் அல்லது பணிப்பாளர்—

(அ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என நிச்சயப்படுத்தும் நோக்கத்துக்காக பகலிலும் இரவிலும் நியாயமான எல்லா நேரங்களிலும் ஏதேனும் மேய்ச்சல் நிலத்தினுள் பிரவேசித்து அதனைப் பார்வையிடலாம்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ், எவரேனும் குத்தகைகொள்வோனால் வைத்திருக்கத் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் பதிவேடுகளைப் பார்வையிட்டு அவற்றின் பிரதிகளை எடுக்கலாம்.

அமைச்சரானவர் 2 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை இல்லாதொழிக்கலாம்.

8. மேய்ச்சல் நிலமென ஒதுக்கிவைக்கப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் காணி அத்தகைய மேய்ச்சல் நிலமாகவிருத்தற்குத் தகுந்ததன்று என அமைச்சர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர் காணிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன், 2 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை இல்லாதொழிக்கலாம்.

இச்சட்டத்தின் கீழான தவறுகளும் தண்டங்களும்.

9. ஏதேனும் மேய்ச்சல் நிலத்தின் எல்லைகளுக்குள்—

(அ) சட்டமுறையான அதிகாரமின்றி எவையேனும் மரங்களை வெட்டி வீழ்த்துகின்ற ; அல்லது

(ஆ) சட்டமுறையான அதிகாரமின்றி எவையேனும் கால்நடைகளை மேயவிடுகின்ற ; அல்லது

(இ) வேண்டுமென்று அத்தகைய காணிக்கு ஏதேனும் சேதம் உண்டு பண்ணுகின்ற அல்லது அதன்மீதுள்ள குத்தகைகொள்வோருக்கு நட்டம் ஏற்படுத்துகின்ற ; அல்லது

(ஈ) அத்துமீறலைப் புரிகின்ற ; அல்லது

(உ) அதன்மீதுள்ள இயற்கையான நீர்வழிகளுடன் குறுக்கிடுகின்ற ; அல்லது

(ஊ) அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் உட்பிரவேசத்துக்கு முட்டுக்கட்டை இடுகின்ற ;அல்லது

(எ) தொற்றுநோயுள்ள எவையேனும் விலங்குகளை உள்ளே செல்லவிடுகின்ற,

எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருநூற்றைம்பது ரூபாவுக்கு குறையாததும் ஆயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்துக்கு, அல்லது ஓராண்டுக்கு மேற்படாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

10. (1) இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படத் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாக, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் செய்துகொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கைகளின் நியதிகளும் நிபந்தனைகளும் ;

(ஆ) குத்தகைகொள்வோரால் பேணப்படவேண்டிய விளைவுப்பெருக்க நியமங்கள் ;

(இ) குத்தகைகொள்வோரால் பதிவேடுகள் பேணப்பட்டு வரவேண்டிய முறை.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று அது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர் வசதிக்கேற்ப, இயன்றளவு விரைவாக அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(5) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அங்கீகார மறுப்புத் தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஒழுங்குவிதி எதுவும் அவ்வாறு நீக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

11. இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி,—

"விலங்கு உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர்" என்பது பிரதிப் பணிப்பாளரொருவரையும், உதவிப் பணிப்பாளரொருவரையும் உள்ளடக்கும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட **வேண்டும்.**